Registered as a Newspaper in Ceylon ✶ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
மலர் 9
இதழ் 199
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆவணி 13 ஜ: அவ்.22 செவ்வாய்க்கிழமை [29-8-67]

## தம்மைப்போல் பொம்மை வைத்துவிட்டு தப்பினாராம்

### ஆயுட் கைதியின் அபூர்வ சாதனை?

யாழ்ப்பாணம், செவ் நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து தப்பிச்சென்ற ஆயுட்காலச் சிறைக்கைதியான ஹெட்டி ஆராச்சிகே பியசேன சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையின்போது பல ருசிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்படி கைதி தும்பினாலும் கந்தல் துணியினாலும் செய்யப்பட்ட ஐந்தரை அடி உயரமுள்ள ஒரு பொம்மையை தமது படுக்கையில் வைத்து தனது போர்வையால் அதனை மூடிவிட்டு சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடியதாகத் தெரியவந்துள்ளது. இந்தப் பொம்மையின் தலைப்பக்கத்தில் வெட்டிய தலைமயிர் ஒட்டப்பட்டிருந்ததாம்.

இவர் தப்பி ஓடிய அன்

[6-ம் பக்கம் பார்க்க[

# ‘தமிழ் மக்களுக்கு எதிரான திட்டமெதையும் எதிர்ப்பேன்’

## 5,000 அங்கத்தவரை சேர்த்தால் அபேட்சகராக முடியும்

பருத்தித்துறை, செவ். "கடந்த தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட அபேட்சகர்கள் எதிர்வரும் தேர்தலிலும், அபேட்சகர்களாக நிறுத்தப்படமாட்டார்கள். 5000அங்கத்தவர்களை கட்சியில் சேர்ப்பவர்களைத்தான் அபேட்சகர்களாக நிறுத்துவோம்.''

வாலிப முன்னணி மகாநாட்டில் திரு. ஜி.ஜி.பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உபதலைவர்கள் தெரிவின்போது, ஒவ்வொரு தொகுதியிலும், அபேட்சகர்களை உபதலைவர்களாகத் தெரிவுசெய்யும்படிகோரப்பட்டபோதே மேற்கண்டவாறு திரு. பொன்னம்பலம் கூறினார்.

இதனை ஏற்றுக் கொண்ட சபையினர் உப-தலைவர்களாக கடந்த தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகர்களை தெரிவுசெய்யவில்லை.

## மூதூர் கூட்டத்தில் அமைச்சர் திருச்செல்வம்

### தமிழ்—முஸ்லிம் உறவு பற்றி திரு. அமிர்தலிங்கம் விளக்கம்

மூதூர், திங்கள்

"தமிழ் பேசும் மக்களுக்கு இன்னல், இடையூறு விளைவிக்கக்கூடிய எந்தத் திட்டம் மந்திரி சபையில் கொண்டுவரப்பட்டாலும் அதை எதிர்ப்பேன்'' என்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் மூதூரில் சிரமதான மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

மந்திரிசபையில் தமிழசுக் கட்சியின் ஓர் அங்கத்தவனாக இருப்பதால் சகல அலுவல்களையும் நிதானமாகக் கவனிக்க வேண்டிய நிலையிருப்பதாகவும் அமைச்சர்சொன்னார். மூதூர் மக்களின் நிலையை தாம் உணர்ந்துள்ளதாகவும் கட்டை பறிச்சான் துறைக்கு பாலம் அமைப்பது தமது கவனத்திலிருக்குமென்றும் அமைச்சர் கூறினார்.

தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டை எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

இந் நாட்டில் தமிழரசுக் கட்சி ஸ்தாபிதமான அன்று தொட்டு இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் ஜீவாதார உரிமை பிரச்னைகளில் கவனம் எடுத்தே வந்துள்ளது. இலங்கையில் தமிழ் பேசும் இனத்தவர் என்று கூறும்போது அதில் முஸ்லிம்களும் முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். அத்தகைய நிலை இருக்கும் போது முஸ்லிம்களுக்கு தமிழரசு என்ன செய்கிறது? என்ன செய்யப் போகிறது என்று ஒருசிலர் கூக்குரல் இடுவது பெரியதோர் ஆச்சரியத்தைத் தருவதாய் உள்ளது.

கிழக்குமாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வதியும் பொத்துவில், நிந்தவூரை அண்டிய கல்லோயாப் பகுதியில் திட்டமிடப்பட்டபடி நடைபெற்றுவந்த குடியேற்றத்தை கண்டித்து வாதிட்டது. எமது தமிழ் அரசுக் கட்சியே தவிர வேறொருவருமில்லை. திகவாப்பிய என்ற இடத்தில் உள்ள பௌத்த விகாரையை அண்டியதும், விகாரை மணியோசை கேட்கக் கூடியதுமான பிரதேசங்களில் வதியும் முஸ்லிம் மக்களையும் அவர்களது நிலபுலங்களையும் அகற்றி பௌத்த சுற்றாடலுக்குத் தக்கதாக குடியேற்றத்தை அரசினர் செய்யத் திட்டமிட்டபோது அதையும் தட்டிக்கேட்டு நிவர்த்தி செய்ததும் நாமேதான். இதுமட்டுமல்ல சாகித்திய மண்டலத்தில் சிங்கள மக்கள் கலாச்சார விடயங்களுக்கு 5 குழுக்களை ஏற்படுத்திய சமயம் அதுபோலவே தமிழ் கலாச்சாரத்துக்கும் 5 குழுக்களை ஏற்படுத்தி அதிலே இஸ்லாமிய அரபிக் கலாச்சாரத்திற்கும் ஒரு குழுவை உண்டாக்கியதும் எம்மவர்கள் வாதாட்டமும் தூண்டுதலுமேயாகும்.

மூதூர் தமிழரசுப்பிரமுகர் அருளப்பர் றேச் டி வாஸ் தலைமை வகித்த இக்கூட்டத்திற்கு திரு. செல்வநாயகம், மகுர் மௌலானா, திருமதி அமிர்தலிங்கம், டாக்டர் நாகநாதன் ஆகியோரும் பேசினர்.

## பொலிஸார் உஷார்

## வடபகுதியிலிருந்து புகையிரத மூலம் கள்ளக்கடத்தல்?

யாழ்ப்பாணம், செவ். வடபகுதியில் புகையிரத மூலம் கள்ளக்கடத்தல் துரிதமாக நடைபெறுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த ஒரு தகவலைத் தொடர்ந்து வடபகுதியிலுள்ள பொலிஸ் அலுவலர்களும், புகையிரத நிலைய அதிபர்களும் நேற்று முதல் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

இனம் தெரியாத நபர்களின் பெயர்களைக்கொண்டு கள்ளவிலாசமிட்டு கள்ளக் கடத்தல் பொருட்களை வடபகுதியிலிருந்து புகையிரதமூலம் பிற இடங்களுக்கு சிலர் அனுப்புவதாகவும், குறிப்பிட்ட சில நபர்கள் இப்பொருட்களை அந்தப் புகையிரத நிலையங்களில் வந்து பெற்றுக்கொள்வதாகவும் கிடைத்த தகவல்களின்பேரிலேயே வடபகுதி பொலிஸ் தலைமைக் காரியாலயம் இந்தத் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சந்தேகத்துக்கிடமான பார்ஸல்கள் பற்றிய தகவல்களை உடன் பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு புகையிரதநிலைய அதிபர்களை பொலிஸார் வேண்டியுள்ளதோடு, இக்கள்ளக் கடத்தலை ஒழிக்க பொதுமக்களையும் ஒத்துழைக்குமாறும் கோரியுள்ளனர். (ந.நி.)

### வவனியா விஜயம்

வவனியா, திங்கள்

வவனியாவுக்கு சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தனஇம்மாத இறுதியில் விஜயம்செய்யவிருக்கிறார். அடுத்தமாத முற்பகுதியில் முல்லைத்தீவுக்கு விஜயம்செய்வார் எனவும் அறியப்படுகிறது.

## எதிரிகள் விடுதலை

காங்கேசன்துறை, திங்கள்

பண்ணாகத்தைச் சேர்ந்த திருமதி இராமசாமி செல்வரத்தினம் என்னும் பெண் மீது பலாத்காரம் பிரயோகித்ததாக இருத்தலடி வாசிகளான வே. சரவணமுத்து என்பவர் மீதும் அவரது மகனை ச. அருளானந்தம் என்பவர் மீதும் சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றம் நிரூபிக்கப்படாததால் எதிரிகள் இருவரையும் நீதிபதி விடுதலை செய்தார்.

## கல்முனை இடைத்தேர்தல்

### தமிழரசு அபேட்சகரை தெரிய உபகுழு

கல்முனை, திங்கள்

கல்முனை இடைத் தேர்தலுக்கு தமிழரசுக் கட்சி அபேட்சகர் ஒருவரைத் தெரிவுசெய்வதற்காக ஓர் உபகுழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மூதூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கட்சி செயற்குழுக்கூட்டத்திலேயே இந்த உபகுழு தெரியப்பட்டது. அமைச்சர் திருச்செல்வம், தலைவர் டாக்டர் நாகநாதன், எஸ். ஜே. வி. செல்வநாயகம், அமிர்தலிங்கம், இராசமாணிக்கம், இராசதுரை ஆகியோர் இவ் உபகுழுவில் இடம்பெற்றுள்ளார்கள்.




திருமண அழைப்பு

மணமகன்: சின்னத்துரை சோமநாதன்
103, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
மணமகள்:(டாக்டர்) சுகிர்தரஞ்சிதம் இளயதம்பி
4/2, அன்னசத்திர ஒழுங்கை, கந்தர்மடம்.
காலம்: 31-8-67 வியாழக்கிழமை மாலை 5-00 மணி தொடக்கம் 7 மணிவரை உள்ள சுபமுகூர்த்தம்.
இடம்: மணமகள் இல்லம்.
உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

க. இளயதம்பி தம்பதிகள்,
திருமதி சின்னத்துரையும் குடும்பத்தினரும்.
206

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நேர்மையிலும்-புனித நோக்கத்திலுமே மனிதன் ஆத்மீக ஈடேற்றத்தை காணமுடியும் ஆகையால் நாம் உண்மையாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

— சுவாமி சிவானந்தா.


# ஈழநாடு

Eelanadu Natlional Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞு ஆவணி மீ 13உ (29-8-67)


## பொதுவான திட்டம்

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் நிலை சென்ற சில வருடங்களாக மோசமடைந்துவருகிறது. இனி என்ன நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவார்களோ என்பது நிச்சய மற்றதாக இருக்கிறது. மலை நாட்டு மக்கள் இலங்கையில் வாழ்வதா, இந்தியாவில் வாழ்வதா என்ற உறுதியற்ற நிலையில் தவிக்கின்றார்கள். வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்கள் பல பிரச்னைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

இச்சமயத்தில் மலை நாட்டு மக்கள் உட்பட இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு பல கட்சிகளும், பல ஸ்தாபனங்களும் பல தலைவர்களும் பல பல யோசனைகளைத் தெரிவிக்கின்றனர். ''இப்படிச் செய்தால் தான் நீங்கள் உரிமை பெற்று மக்களாக வாழ முடியும்'' என்று அவரவர் தமக்குத் தெரிந்த, தமது கொள்கைகளுக்கேற்ப ஆலோசனை கூறுகின்றனர். தங்கள் கொள்கைகளை விளக்கி கூட்டம் கூட்டிப் பேசுகின்றனர்; துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுகின்றனர்; பத்திரிகைகளில் அறிக்கை வெளியிடுகின்றனர்; மகாநாடு கூட்டி எடுத்துக்காட்டுகின்றனர். ஒவ்வொருவரும் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறவும், குறைகள்நீங்கி நல்வாழ்வு வாழவும் தாங்கள் கூறும் திட்டமும் கொள்கையும் வழியுமே சரியெனக் கூறுகின்றனர். அவர்கள் நோக்கம் நல்லதாக இல்லையென்று கூறமுடியாது. மக்களுக்கு நல்வழி காட்டுவதாகவே அவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். இதில் அவர்கள் மீது தவறு சொல்லவும் முடியாது.

ஆனால் ஆளுக்கொரு யோசனையும் கட்சிக்கொருதிட்டமுமாக வெளியிடுவது தமிழ்பேசும் மக்களுக்குமேலும்மேலும் சிக்கலை ஏற்படுத்திஎதைச் செய்வது, எதைக் கேட்பது என்ற குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் எதையும் செய்யமுடியாது திரிசங்கு நிலையிலுள்ளனர். இந்தக் குழப்ப நிலை அவர்களுக்குள் வேற்றுமையை அதிகரித்து இருக்கும் உரிமைகளையும், சலுகைகளையும் வசதிகளையும் இழந்துவிடவே வழிவகுக்கிறது.

பருத்தித்துறையில் ஒரு மகாநாடு, எட்டியாந்தோட்டையில் ஒரு மகாநாடு, கல்முனையில் ஒரு மகாநாடு, கம்பளையில் ஒரு மகாநாடு என மூலைக்கொரு மகாநாடும் கட்சிக்கொரு மகாநாடும் கூட்டி ஏற்கனவே மூளை குழம்பியிருக்கும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு மேலும் குழப்பமேற்படுத்தாமல் இந்தக் கட்சிகளும் தலைவர்களும் ஒரு பொதுத் திட்டம் வகுத்து வழிகாட்டுவதே நல்லது.

# 'பத்திரிகை, சினிமாவின் நிலைமை வலியுறுத்தப்படல் வேண்டும்'

கொழும்பு, திங்கள்

சர்வசமய சம்மேளனம் அதன் மாதாந்த செய்தி இதழில் பத்திரிகையின் முக்கியத்துவம் பற்றியும் சினிமாவுடன் சமூக வாழ்க்கை எவ்வாறு பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது என்பதையும்விபரமாகத்தெளிவு படுத்தியுள்ளது

இது சம்பந்தமாக அவ்விதழில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வளர்ந்துவரும் பொருளாதார அபிவிருத்தியில் பத்திரிகை சினிமாவின் முக்கியத்துவம் திடமாக வலியுறுத்தப்பட வேண்டும். எமது நாட்டில் பத்திரிகை, சினிமா முதலியன மிகவும் பிரதான செல்வாக்கை மக்கள் மத்தியில் பெற்றுள்ளது.

சினிமாவை ஒரு பொழுது போக்கு வைபவமாகவும் பத்திரிகையை உணர்ச்சியான செய்திகளைப் பிரசுரிக்கக்கூடிய மூலமாகவும் நாம் கருதக்கூடாது.

சினிமாப்பட தணிக்கை சபைகளை நியமிக்கும் பொழுதுகலாச்சார அறிவும் நிபுணத்துவம் பெற்றவர்களை நியமிப்பதுடன் நில்லாது அரசாங்கம் சமய தார்மீக அறிவுகொண்டவர்களையும் நியமிக்கவேண்டும் என நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆபாச சுவரொட்டிகள் மூலம் சினிமாவை விளம்பரப்படுத்தும் முறை தணிக்கைசெய்யப்படவேண்டும்.

அத்துடன் பத்திரிகைகள் தாமாகவே ஒரு சபையை நியமித்து ஏற்ற நியதிகளை ஏற்படுத்தி அதற்கு உகந்தவாறு நாளாந்த வேலைகளை அபிவிருத்தி செய்யவேண்டிய ஆதரவுகொடுக்கப்படல் வேண்டுமென நாம் கூற விரும்புகிறோம். இதன் காரணமாகப் பத்திரிகைகளின் சுதந்திரத்தையும் சமூகப் பொறுப்புணர்ச்சியையும் வளர்ப்பதே எமது பிரதான குறிக்கோள்.

## பள்ளி மாணவனின் பரிதாப மரணம்

கடலூர், ஆக. 28

திருப்பாதிரிப்புலியூர் சென்ற் ஜோசப் உயர்நிலைப் பள்ளித் தோட்டத்தில் சுண்ணும்பு அடிக்கும் உருளைக் கல்லை உருட்டி விளையாடிக் கொண்டிருந்த பத்து வயது மாணவன் பரிதாபகரமாக மாண்டான்.

பள்ளி ஆண்டு விளையாட்டுப் பந்தயத்தைப் பார்க்க வந்த மாணவன், இடைவேளையில், வேறு சில பையன்களுடன் சேர்ந்து உருளையின் அச்சுக்கட்டையைத் தள்ளி விளையாடிக் கொண்டிருக்கையில் தவறி அச்சுக்கட்டையின் அடியில் குப்புற விழுந்து நசுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கவலைக்கிடமான நிலையில் தலைமை மருத்துவமனைக்குச் சிகிச்சைக்குக் கொண்டு போனதும் இறந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

## வவனியா எம். பி. மீண்டும் வாலிப முன்னணித் தலைவர்

பருத்தித்துறை. செவ்.

தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி தலைவராக மீண்டும் வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்வாலிப முன்னணி பொதுச்செயலாளராக திரு. வீ. ஆனந்த சங்கரி தெரிவுசெய்யப்பட்டார்.

இணைக்காரியதரிசிகளாக திரு. சபா. செந்தில்ராசா. திரு. சி. முதலியார், திரு. வி. கனகராசா ஆகிய மூவரும் தெரிவுசெய்யப்பட்டனர். தனாதிகாரிகளாக திரு. வி. ஜெயானந்தம், திரு. எஸ். திருநாவற்கரசு ஆகி

]6-ம் பக்கம் பார்க்க]

## இன்றைய பலன்

29-8-67
செவ்வாய்க்கிழமை
[ஆவணி மாதம்13ம்திகதி
நட்சத்திரம் -ரோகணி.
பகல் 9-24 வரை மேல்.
திதி-நவமி இரவு 10-00 வரைமிருகசீரிடம் மேல் தசமி
சுபநேரம்-10-34-12-04
ராகுகாலம் 3-04-4-34

மேடம்- ஆசை மிகுதி, அலேமோதும் மனம்
ரிஷிபம்- அபிப்பிராய பேதம், ஆழ்ந்தசிந்தை.
மிதுனம்- அன்பர்கள் வருகை, ஆதரவுதேடல்
கடகம்-தவிக்கும் நெஞ்சம், தவறான பாதை.
சிங்கம்- வீட்டு நலன். வெற்றிவாகை.
கன்னி- ஜெயமுண்டு பயமில்லை, நல்லநாள்
துலாம்- வஞ்சகர், உறவு, சஞ்சலமிகுதி
விருச்சிகம்- காதல்விசய் கவலை தீரும்
தனுசு- எதையும்தாங்கும் இதயம் வேண்டும்
மகரம்- தடுமாற்றம் வேண்டாம் தன்தொழில் விருத்தி
கும்பம்- அறிவாற்றல் அரசுபோகம்
மீனம்- காரிய நஷ்டம் கடன்பட நேரிடும்

—சோதிடகலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## ஜி. சி. ஈ. பரீட்சை பற்றிய புது விதிகள்

காங்கேசன்துறை, திங்.

ஜி. சி. ஈ. [சாதாரணதர] பரீட்சைக்கென புதிதாக இவ்வருடம் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நடக்கும் இடங்களின்பெயர்கள் குறிப்பிட்ட பிரதி ஒன்று கல்வி இலாகாவினால் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இப்பிரசுரத்தின்படி பரீட்சை ஸ்தானங்கள் குறைக்கப்பட்டுள்ளன. பாடசாலைத் தலைவர்களும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தங்கள் பிரவேச அட்டவணையில், விண்ணப்பப் பத்திரத்தில் ஆகக்கிட்டிய பரீட்சை இடத்தை மட்டும் குறிப்பிடும்படியும் பரீட்சை எடுக்கும் பாடசாலையோ, கல்லூரியோ குறிக்கப்படக்கூடாதெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இப்புதிய முறையால் பரீட்சார்த்திகள் தாங்கள் நினைத்த இடத்தை தெரிவுசெய்தாலும், தாங்கள் நினைத்த பாடசாலையையோ, கல்லூரியையோ தெரிவுசெய்யமுடியாது.

வட, கிழக்கு மாகாணங்களில் ஜி. சி. ஈ. [சாதாரணதர] பரீட்சைக்கென அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நடக்கும் இடங்களின் அட்டவணை வருமாறு!

### வடமாகாணம்

அனலைதீவு, அச்சுவேலி, சாவகச்சேரி, சுழிபுரம், சுன்ஞகம், நெடுந்தீவு, ஏழாலை, எருக்கலம்பிட்டி, இளவாலை, யாழ்ப்பாணம், கந்தரோடை காரைநகர், ஊர்காவற்துறை, கரணவாய், காங்கேசன்துறை, கிளிநொச்சி, கொக்குவில், கோப்பாய், மட்டுவில், மல்லாகம், மண்டைதீவு, மாணிப்பாய், மன்ஞர், மாதகல், மீசாலை, முல்லைத்தீவு, முள்ளியவளை, நயினதீவு, நாவற்குழி, நெல்லியடி, பளை, பண்டத்தரிப்பு, பருத்தித்துறை, பூநகரி, புலோலி, புங்குடுதீவு, புத்தூர், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, திருநெல்வேலி, உடுப்பிட்டி, உடுவில், உரும்பராய், வட்டுக்கோட்டை, வல்வெட்டித்துறை, வசாவிளான், வவனியா, வேலணை, விடத்தல்தீவு.

### கிழக்கு மாகாணம்

அக்கரைப்பற்று, அம்பாறை, மட்டக்களப்பு. கொமறன்கடவல, கல்முனை, கந்தளாய், கிண்ணியா, குச்சவெளி, மூதூர், பட்டிருப்பு, பொத்துவில், திருக்கோணமலை, வந்தாறுமூலை.

## சங்காபிஷேகம்

மல்லாவி, திங்கள்

மல்லாவி ஸ்ரீபாலசுப்பிரமணியர் கோவிலில் வரும் புதன்கிழமை பகல் 12 மணிக்கு சுவாமிக்கு அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும் ஆராதனையும் நடைபெறவிருக்கிறது. இரவு மேளக்கச்சேரியும் சங்கீதகதாப்பிரசங்கமும் நடைபெறும். அன்று அன்னதானமும்வழங்கப்படும்.

## பியாவ்ராவுக்கு அமெரிக்க உதவி

லாகோஸ், ஆகஸ்ட் 28

சமஷ்டி நைஜீரியாவிலிருந்து பிரிந்து சென்றுள்ள பியாவ்ராவுக்கு அமெரிக்கா ராணுவ ஆயுதங்களும், விமானங்களும் அளித்து உதவி புரிவதாகச் சமஷ்டி நைஜீரியா அமெரிக்காவைக் குற்றஞ்சாட்டியுள்ளது.

நைஜீரிய உள்நாட்டுப் போரில் அமெரிக்கா ஆற்றி வரும் பங்கினைச் சமஷ்டி நைஜீரியா கண்டித்துள்ளது.

## மே. ஜெர்மனி தடை செய்கிறது

மாஸ்கோ, ஆகஸ்ட் 28

அணு ஆயுதத் தடை ஒப்பந்த மொன்றைக் கைச்சாத்திடும் முயற்சிக்கு மேற்கு ஜெர்மனி தடையாகவுள்ளதாக சோவியத் யூனியன் குற்றஞ்சாட்டியுள்ளது.

## தம்மைப்போல்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரவு காவல் செய்துகொண்டிருந்த சிறைக்காவலாளர் இந்தப் பொம்மை படுக்கையில் கிடத்தப்பட்டு போர்வையால் போர்த்தப்பட்டிருந்ததைப் பார்த்து இவர் தான் படுத்திருப்பதாக இது சம்பந்தமாக சந்தேகம் கொள்ளாதிருந்தாரென்றும் மறுநாட்காலை 8 மணியாகியும் தப்பி ஓடிய கைதிஎழுந்திருக்கவில்லையே என சந்தேகித்த குறிப்பிட்ட காவலாளர் சிறை உட்சென்று பார்த்தபோதே விபரம்புரிந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தப்பியோடிய கைதி சிறையின் கூரையைப் பிரித்து கயிறு ஒன்றின் உதவியினால் தப்பியதாகத்தெரியவந்துள்ளது.

மேற்படி கைதி பொம்மை செய்வதற்கான பொருட்களையும் கயிறையும் எவ்விதம் பெற்றார் என்பது மர்மமாகவே இருந்துவருகிறது.

இது பற்றி சிறைச்சாலைச் சுப்ரீண்டன்ட் திரு. ஜயன்திபூரண விசாரணைமேற்கொண்டுள்ளார்.

சிறைச்சாலைக் காவலாளர் மூவர் இப்போது விசாரணை செய்யப்பட்டுவருகின்றனர்

[ந. நி

# தமிழ்க் காங்கிரஸுடன் சேர இந்திய தொழிலாளர் அவா

## பாரிஸ்டர் சிவானந்தன் தகவல்

வல்வெட்டித்துறை, திங்கள்

'ஐக்கிய தோட்டத்தொழிலாளர் சங்கம்' என்றபெயரில் இந்தியத் தொழிலாளர் சங்கம் ஒன்றை அமைத்துள்ளதாகவும், தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் இச்சங்கம் இயங்க விருப்புவதாக விண்ணப்பித்துள்ளதாகவும் பருத்தித்துறையில் நேற்று நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸின் ஐக்கிய தொழிற்சங்க சம்மேளனத்தின் 2வது மகாநாட்டில் பேசிய பாரிஸ்டர் எம். சிவானந்தன் கூறினார்.

மூவாயிரம் அங்கத்தவர்களைக்கொண்ட இச்சங்கத்தின் வேண்டுகோள்மீது தமிழ்க் காங்கிரஸ் விரைவான நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாக அவர் சொன்னார்.

வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பேசுகையில் தெரிவித்ததாவது:—

''இடதுசாரிக் கட்சியினர் தாமே இலங்கையின் தொழிற்சங்கவாதிகளெனக் கூறிவந்தனர் ஆனால் இடதுசாரிக் கட்சியினர் வடக்கு கிழக்குப் பகுதி மக்களைப் புறக்கணித்து மற்றப்பகுதிகளில் கவனம் எடுத்துவந்திருக்கிறார்கள். வடக்கு கிழக்குப் பகுதி மக்கள் தமிழர் என்ற காரணத்தினாலேயே இக்கதியேற்பட்டது.''

தொழிலாளர் இயக்கம் மிகவும் புனிதமானது, தூய்மையானது. தொழிலாளர் பழிவாங்கப்படுவதை நாம் ஒருபோதும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். கடந்தகால அரசாங்கம் தமிழ் தொழிலாளர் பிரச்னையில் அக்கறைகாட்டத் தவறிவிட்டது நமது கட்சி தொழிலாளர் பிரச்னையில் அக்கறை காட்டி வருவதனால்தான் இன்று தொழிலாளர் வெற்றிகண்டும் வருகிறார்கள். அரசாங்கம் வடக்கு, கிழக்கு என்று பாராமல் தொழிலாளர் இயக்கத்துக்கு உதவி புரியவேண்டும். பொருளாதார விருத்திக்கு அரசாங்கம் உணவு உற்பத்திச் சேவையை தமிழ்ப்பகுதிகளிலும் பெருக்க வழிவகுக்கவேண்டும்,''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபு உச்சிமாநாடு இன்றுகார்டூமில் ஆரம்பம்

## டுனீசியாவும் லிபியாவும் கலந்துகொள்ள மாட்டா

கார்டூம், ஆக. 29

**அரபு நாட்டுத் தலைவர்களின் உச்சி மாநாடு கார்டூமில் இன்று ஆரம்பமாகவிருக்கிறது.**

நேற்று முன்தினம் இங்கு நடைபெற்று முடிந்த அரபு வெளியுறவு மந்திரிகள் மாநாட்டின் முடிவில், இத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

தலைவர்கள் விவாதிப்பதற்கென 4 அம்சங்களடங்கிய அட்டவணையொன்றை அரபு வெளியுறவு மந்திரிகள் தயாரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், அட்டவணையின் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இஸ்ரேலின் வலுத்தாக்குதலினால் ஏற்பட்ட விளைவுகளை அறவே நீக்குவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது. அரபுப் பிரதேசங்களிலுள்ள வெளிநாட்டுத் தளங்களை நீக்குவது ஆகிய விஷயங்கள் இவ் அட்டவணையில் இடம்பெற்றுள்ளதாக நம்பகமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அபிப்பிராய பேதம

ஆனால், மேற்கு நாடுகளுக்கு எண்ணை விநியோகத்தைத் தடைசெய்வதுபற்றி வெளியுறவு மந்திரிகளிடையே அபிப்பிராயபேதம் நிலவியதாகவும், அவர்கள் அதையிட்டு ஏகமனதான முடிவொன்றுக்குவர முடியவில்லையென்றும் தெரியவருகிறது.

இன்று கார்டூமில் ஆரம்பமாகும் அரபு உச்சி மாநாட்டில், தற்போது கெய்ரோவுக்கு விஜயஞ் செய்துள்ள ஈமன் ஜனாதிபதி சலாலும் பங்குபற்றுவார்.

### இவர்கள் பங்குபற்றவில்லை

ஆனால், டுனீசிய ஜனாதிபதி போர்குபாவும், லிபியா மன்னர் இதிரிசும் சுகவீனம் காரணங்காட்டி, மாநாட்டில் கலந்துகொள்வதிலிருந்து தமக்கு விலக்களிக்குமாறு கேட்டுள்ளனர்.

மாநாட்டுக்கான ஐக்கிய அரபுக்குடியரசுத் தூது கோஷ்டிக்கு, ஜனாதிபதி நாஸரே தலைமை தாங்குவாரெனத் தெரிகிறது.

## சென்னையில் சிக்கிம் அரச தம்பதிகள்

சென்னை, ஆக. 28

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள சிக்கிம் அரச தம்பதிகள், நேற்றுத் தமது விஜயத்தின் முதற்கட்டமாகச் சென்னை வந்துசேர்ந்தனர்.

அவர்கள் சென்னை நகரை நேற்றுச் சுற்றிப் பார்த்தனர். மரீனா கடற்கரைக்கும், இந்திய தொழில் நுட்பக்கல்லூரிக்கும் அவர்கள் சென்றனர்.

## வெள்ளத்தில் 24 பேர் உயிரிழந்தனர்

புதுடில்லி, ஆக. 28

ஜமுனா ஆறு, அபாய நீர் மட்டத்திலின்றும் இரண்டரை அடி மேலே உயர்ந்துள்ளது. டில்லி மாவட்டத்தில் 100 கிராமங்கள், ஆற்றுப் பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ளன.

உத்தரப் பிரதேசத்தில், வெள்ளத்தினால் 24 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான வீடுகளும் சேதமடைந்துள்ளனவாம்.

## ரொடீஷியாவில் நடைபெறும் ஆபிரிக்க சுதேசிகள் கலகம்

### இராணுவ நடவடிக்கைகளினால் வெள்ளையருக்கு அச்சம்

சலிஸ்பரி, ஆக. 28

வெள்ளை சிறுபான்மையினரின் ஆதிக்கத்தில் இருந்துவரும் ரொடீஷியாவில் கடந்த இரு வாரங்களாகக் கலக நிலை இருந்துவருகிறது. கலகம் செய்துள்ளோர் தென் ஆபிரிக்ககாங்கிரசை சேர்ந்த சுதேசிகளாவர். அவர்களில் மூவாயிரம் தொடக்கம் நாலாயிரம் பேர் வரை, போர்ப்பயிற்சிபெற்று ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கலகத்தை அடக்கும் முயற்சியில் பல வெள்ளைக்காரப் போர் வீரரும், 30 நீக்ரோக்களும் மாண்டதாகச் சொல்லப்படுகிறது. பிடிபட்டவர்களிடம் ரஷ்ய, சீன ஆயுதங்கள் இருந்தனவாம்.

### ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம்

ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனமேகலகக்காரர்களுக்குப் பயிற்சி அளித்து கொரில்லாப் போரைத் தொடங்கியிருப்பதாகக் கருதப்படுகிறது.

ரொடீஷியாவின் உதவிப் பிரதமரும் தென் ஆபிரிக்கப் பிரதமரும் சேர்ந்து தமது மக்களுக்கு அறிக்கை விடுத்துள்ளனர். பயப்பட வேண்டாம், நிலைமை சமாளிக்கப்படும் என்று அவர்கள் அபயமளித்துள்ளனர்.

### வெள்ளையர் பீதி

1896 போருக்குப் பிறகு, இராணுவநடவடிக்கைகளில் வெள்ளையர் கொல்லப்படுவது இதுவே முதற்தடவையாகும். எனவே வெள்ளையரிடையே இருநாடுகளிலும் பீதி நிலவி வருகிறது.

அடுத்தாற் போலுள்ள மொஸாம்பீக் என்ற போர்ச்சுகீசிய காலனியிலும் விடுதலை இயக்கத்தினர் பெரும் போர் நிகழ்த்தி வருகின்றனர்.

### ஸாம்பியாவுக்கு எச்சரிக்கை

ரொடீஷியாவை அடுத்துள்ள ஸாம்பியா வழியாகத்தான் பயிற்சிபெற்ற கொரில்லாக்கள் வருவதாக ரொடீஷிய, தென் ஆபிரிக்கப் பிரதமர் கள்கருதுகின்றனர் எனவே அவர்களுக்குப் புகலிடம் தந்து வழிவிடலாகாது என்று ஸாம்பியா அரசாங்கத்தைப் பிரதமர்கள் எச்சரித்துள்ளனர்.

ஸாம்பியாவிலிருந்து வந்துள்ள ஊடுருவல்காரர்களுடன் நடக்கும் மோதல் பற்றி ரொடீஷியா அரசாங்கம் நேற்று ஓர் அறிக்கை விடுத்தது, இரு தரப்பிலும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கை கூறியது.

### உயிர்ச் சேதம்

23 பயங்கரவாதிகள் உயிரிழந்தனர் என்றும் 265 பேர் கைதிகளாகப் பிடிபட்டதாகவும், அரசினர் தரப்பில் 6 இராணுவத்தினர் இறந்ததாகவும், 12 பேர் காயமடைந்ததாகவும் அறிக்கை தெரிவித்தது.

கடந்த மூன்றுவாரங்களில் ஏராளமான தென்னாபிரிக்கத் துருப்புகள் விமான மூலம் ரொடீஷியாவுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஜிம்பாப்வே ஆபிரிக்க மக்கள் யூனியன் புகார் செய்துள்ளது.

## இந்திய ராஜ்ய சட்ட மந்திரிகள் மகாநாடு

புதுடில்லி, ஆக. 28

இந்திய ராஜ்ய சட்ட மந்திரிகளின் மாநாடொன்று 31-ந் திகதி இங்கு ஆரம்பமாகும். மாநாடு இரு தினங்களுக்கு நீடிக்கும்.

இம்மாநாட்டை இந்திய துணைப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் திறந்துவைப்பார். மத்திய சட்ட மந்திரி திரு. கோவிந்த மேனன், மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.

இந்திய ராஜ்ய மொழிகளின் நிலைபற்றி இம்மாநாடு சட்டரீதியாகஆராயுமெனத் தெரிகிறது.

## ஸ்ரீநகரில் மீண்டும் கலவரம்

ஸ்ரீநகர், ஆகஸ்ட் 28

ஸ்ரீநகரில் நேற்று மீண்டும் குழப்பம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, சிவிலியன் அதிகாரிகளுக்கு உதவியாக ராணுவம் அழைக்கப்பட்டது.

அண்மையில் அங்கு நடைபெற்றகலவரங்களில் கொல்லப்பட்ட ஒரு சிறுவனின் பிரேத ஊர்வலத்தின்போது மக்கள் கும்பல் கற்களை வீசியதைத் தொடர்ந்தே இக் குழப்பம் ஏற்பட்டது.

ஜம்முவில் இப்போது நிலைமைகட்டுக்கடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிராமங்களில் அதிக கிளைகள் நிறுவுமாறு கோரிக்கை

## வங்கி முதலாளிகளிடம் இந்திய துணை பிரதமர் தேசாய்

புதுடில்லி, ஆக. 28

இந்திய துணைப் பிரதமரும், நிதி மந்திரியுமான திரு. மொரார்ஜி தேசாய், கிராம மக்களுக்கு அதிக கடன் வசதிகள் அளிக்கும் வகையில் கூடுதலான கிளைகளைத் திறக்குமாறு வங்கி முதலாளிகளைக் கேட்டுள்ளார்.

வங்கி முதலாளிகளின் தூதுகோஷ்டி ஒன்று, நேற்று திரு.தேசாயைச் சந்தித்துப் பேசிய போதே, அவர் அவர்களிடம் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

விவசாயம், சிறு கைத்தொழில் ஆகியவற்றுக்கு கடனுதவி அளிக்கத் தமது வங்கிகள் எடுத்துவரும் நடவடிக்கைகளையிட்டு வங்கி முதலாளிகள் நிதி மந்திரியிடம் விளக்கினர்.

## சீரணியில் சேர மாதருக்கு அழைப்பு

சென்னை, ஆக. 28

பொதுநலப் பணியில் ஈடுபட்டுள்ள மாதர்கள் சீரணிப்படையில் சேர்ந்து சேரிவாசிகளின் நிலையை மேம்படுத்த முயலவேண்டும் எனத் தமிழக சமூக நல மந்திரி திருமதி சத்தியவாணி முத்து, நேற்று முன்தினம் இங்கு நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கேட்டுக்கொண்டார்.

அகில இந்திய மாதர் உணவுக் கவுன்சிலின் சென்னை ராஜ்யக் கிளையின் கூட்டத்தில்கலந்துகொண்டு பேசுகையிலேயே மந்திரி இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

## கி. பாகிஸ்தான் அகதிகள்

சில்லொங், ஆகஸ்ட் 28

கடந்த சில வாரங்களில், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 2,000க்குமதிகமான அகதிகள் அஸ்ஸாமுக்கும், திரிபுராவுக்கும் வந்து சேர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மொங்கோலியாவில் சீனத்தலையீடு

மாஸ்கோ, ஆகஸ்ட் 28

மொங்கோலியக் குடியரசின் உள்நாட்டு விவகாரங்களில் சீனா தலையிடுவதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு, ரஷ்ய பத்திரிகையான பிராவ்டாவில் வெளியிடப்பட்டுள்ளது.

# தேசியவிடுதலை முன்னணிக்கு

## தென்.கொரிய பிரதமர் அழைப்பு

சைகோன், ஆக. 28

தென் கொரியாப் பிரதமர் ஏர் மார்ஷல் காகீ, வியட்காங் இயக்கத்தின் அரசியல் நிறுவனமாகிய தேசிய விடுதலை முன்னணியுடன் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் பேச்சுவார்த்தைகள் நடாத்தத் தாம் தயாராகவிருப்பதாகக் கூறியுள்ளார்.

### பாதுகாப்புக்கு உத்தரவாதம்

தம்மைச் சந்திக்க வெளிவரும் தேசிய விடுதலை முன்னணிப் பிரதிநிதிகளுக்குத் தாம் பாதுகாப்பளிக்க உத்தரவாதம் தருவதாகவும் அவர் அறிவித்துள்ளார். ஆனால், இதுவரை அவரது கோரிக்கைகளுக்குத் தேசிய விடுதலை முன்னணியினர் எவரும் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை.

## திபேத்தில் சீன இராணுவம்பிளவு

லாஸா, ஆக. 28

திபேத்திலுள்ள சீன இராணுவம் இரண்டாகப் பிளவுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இம்மாதம் 7-ந்திகதியன்று இரு பிரிவினருக்குமிடையே நடைபெற்ற மோதலில், பலத்த ஆட்சேதம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

### 3 மாகாணங்களில்

இதற்கிடையில், சீனாவில் மேலும் மூன்று மாகாணங்களில் மா-ஸே-துங் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளருக்குமிடையே கடும் சண்டை நிகழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்வியட்னும் மீது வியட்காங்கியர்கடும்தாக்குதல்

## அமெரிக்க ஹெலிகொப்டர் விமானங்களும் சேதம்

சைகோன், ஆக் 28

**தென் வியட்னுமில் வியட்காங்கியர் நேற்றுக் கடுமையான ரொக்கெட் தாக்குதலை ஏழு வெவ்வேறு முனைகளிலிருந்து தொடுத்தனர்.**

ஓரிடத்தில் 46 தென் வியட்னும் போர் வீரரும், மற்றோரிடத்தில் 60 தென் வியட்னுமியரும் கொல்லப்பட்டனர். மற்றும் 200 பேருக்குமதிகமானோர் காயமுற்றனர்.

### விமானத்தளம் தாக்கப்பட்டது

கடைசியாகக் கிடைக்கப் பெற்றுள்ள செய்திகள் வியட்காங்கியர் டானங் [illegible] ஹெலிகொப்டர் விமான தளத்தை ரொக்கெட்டுகளினால் தாக்கியதாகவும், பல ஹெலிகொப்டர்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றன.

## படகு கவிழ்ந்து ஒருவர் இறந்தார்

கோழிக்கோடு, ஆக. 28

பேப்பூர் என்ற இடத்துக்கருகில் கடலில் மீன்பிடிப் படகு ஒன்று கவிழ்ந்ததால், ஒருவர் மூழ்கி மாண்டார். படகிலிருந்த மற்ற நாலு பேரும் நீந்திக் கரைசேர்ந்தனர்.

## கி. ஐரோப்பாவுக்கு இந்திய காங்கிரஸ் கமிட்டி விஜயம்

புதுடில்லி, ஆக. 28

கிழக்கு ஜெர்மனி, ரூமேனியா, ஹங்கேரி, இந்நாடுகள் உட்படப் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தூதுகோஷ்டியொன்று விரைவில் விஜயம் செய்யும்.

இத் தூது கோஷ்டிக்குப் பார்லிமெண்ட் காங்கிரஸ் உதவிக் காரியதரிசி திரு. எஸ். என். மிச்ரா தலைமை தாங்குவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மாவட்டசபையை எதிர்த்து வாக்களிப்போம்'

## தமிழ்க்காங்கிரஸ் பகிரங்க கூட்டத்தில் உடுப்பிட்டி எம்.பி.

(நாவலர் அரங்கு)

பருத்தித்துறை, திங்கள்

''தமிழ் இனத்தை அழிக்கக்கூடிய மாவட்டசபை பார்லிமெண்டுக்குக் கொண்டுவரப்பட்டால் நிச்சயமாக அதனை எதிர்த்தே வாக்களிப்போம்'' என்று உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் நேற்றிரவு இங்கு கூறினார்.

''1944 ம் ஆண்டிலிருந்து ஒரே கட்சியிலிருந்த தமிழினம் ஒரு சில தமிழ் தலைவர்களால் என்று பிரிக்கப்பட்டதோ, அன்றே தமிழினத்துக்குக் கெடுகாலம் தொடங்கியது'' என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினார்.

நேற்றிரவு இங்கு நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் 22-வது வருடாந்த மகாநாட்டின் இறுதி நிகழ்ச்சியான பகிரங்கக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையிலேயே இவர்கள் மேற்கண்டவாறு சொன்னார்கள்.

திரு, ஜி ஜி, பொன்னம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'1933-ம் ஆண்டிலிருந்து 44-ம் ஆண்டுவரை ஒருவித மான குறை, குற்றம், பிரச்னை இல்லாமல் வாழ்ந்து வந்த தமிழினத்துக்கு இப்படியான ஒரு நிம்மதியற்ற வாழ்வு ஏற்பட்டது எதனால்? அந்நேரத்தில் சட்டசபையில் அங்கம் வகித்த ஒரு சில அங்கத்தவர்களாகிய நாம் ஒரே கட்சியிலிருக்காவிட்டாலும் ஒற்றுமையாக, தமிழர் பிரச்னையை ஒரே நோக்குடன் அணுகி தீர்த்துவந்தோம். ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்த நாட்டைவிட்டுப் போனதும் வந்தது எங்களுக்கு வினை. ஒரே கட்சியிலிருந்த தமிழினம் ஒரு சில தமிழ்த்தலைவர்களால் பிரிந்தது. போட்டியையும், பூசலையும் தமிழ் மக்களிடையே வளர்ந்தது. இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும் தமிழன் இந்நிலைக்கு வந்தது யாரால் என்ற மூடுமந்திரம்

பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கியபோது, சிறுபான்மையின மக்களுக்கும் சமத்துவம் வழங்கப்படவேண்டுமென்ற ஷரத்தையும் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று வாதாடினேன். அப்பொழுதே இப்படியான ஒரு நிலைமை உருவாகுமென்று தெரிந்திருந்தபடியால் தான் இப்படியான ஒன்றுக்காக அன்று வாதாடினேன், ஆனால் அது நடக்கவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் சேர்க்கப்பட்டது.

சிறுபான்மைச் சமூகத்தைப் பாதிக்கக்கூடிய எந்தவொரு திட்டத்தையும் கொண்டுவரக் கூடாதென 29-வது ஷரத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இது நான் அன்று சோல்பரி குழுவிடம் வாதித்ததனால் கிடைத்த பெறுபேறு. இதைக்கூட இல்லாமல் செய்வதற்கு சுதந்திரக் கட்சியிலுள்ள சிங்களத் தலைவர்கள் முயற்சிக்கின்றனர்.

### உரிமை பெற்று வாழ்வது எப்படி?

பெரும்பான்மையின சமூகத்தின் ஆட்சியில் சிறுபான்மையினம் எப்படித் தமது உரிமைகளைப் பெற்று வாழ்வது? இரண்டு வழிகள் இருக்கின்றன. ○ ஒன்று பெரும்பான்மை அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைப்பதன்மூலம். ○ இரண்டாவது, அவர்களுடன் சண்டை பிடித்து உரிமைகளைப் பெறுவதன் மூலம்.

சண்டை பிடிப்பதன் மூலம் உரிமைகளைப்பெற முடியாதென்பதை அன்றே நான் உணர்ந்தபடியால் 48-ம் ஆண்டில் டி. எஸ். அரசாங்கத்தில் செல்வநாயகத்தின் அனுமதியுடன் மந்திரி சபையில் சேர்ந்தேன். திரு. செல்வநாயகம் இதனை மறுக்கமாட்டார். ஏனெனில் அவர் தனது கையெழுத்துடனேயே அனுப்பிய கடிதம் ஒன்று இப்பொழுதும் அத்தாட்சி கூறும். கட்டாயம் ஒத்துழைக்கவேண்டுமென்று அவரே கூறினார்.

### என்ன செய்தார்?

கடந்த இரண்டரை வருடகாலமாக மந்திரிசபையில் இருக்கிறரே ஒரு தமிழர், அவர் தமிழருக்குஎன்ன செய்தார் என்று கேட்கிறேன். 1948-53 வரை நான் மந்திரிசபையிலிருந்த போது நான் செய்தவைகளைச்சொல்லித்தான்தெரிய வேண்டியதில்லை.

### உடுப்பிட்டி எம். பி. பேச்சு

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

ஒரு கொடியின் கீழ் ஒற்றுமையாக அனுப்புங்கள் எங்களை என்று கேட்டோம். தமிழினம் பசப்புவார்த்தையில் ஏமாந்துவிட்டது. ஆனாலும், தமிழ் மக்கள் இப்போது உணர்ந்துவிட்டார்கள். மாவட்டசபைவந்தால் தமிழர் பிரச்னை தீரும்என்று எண்ணுகிறோம். மாவட்டசபை என்றால் என்ன? இதற்கு என்ன அதிகாரம்? பணம் எங்கே இருந்து வரப்போகிறது? மாவட்டசபை தமிழரை இந்நாட்டிலிருந்து அழித்துஒழித்துவிடுமென்றே சொல்லலாம். மாவட்டசபை பார்லிமெண்டுக்கு வந்தால் அதனை எதிர்த்தே திருவோம்.

### நாளையே இந்து பல்கலைக்கழகம்

வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ் பேசும் மக்களின் முதல் எதிரி சிங்களவரல்ல; சமஷ்டிக் கட்சியினர் தான். இந்துப்பல்கலைக்கழகம் தேவை என்ற நமது கோரிக்கைக்கு சிங்களத் தலைவர்கள் எவருமே எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. சமஷ்டிக் கட்சியில் ஓர் அங்கத்தவர் பார்லிமெண்டில் இந்துப் பல்கலைக்கழகத்துக்குஆதரவு தெரிவித்து ஒரு நிமிடம் பேசினால் போதும் நாளையே இந்துப்பல்கலைக்கழகம் கிடைத்துவிடும்.

நீர்கொழும்புஇடைத்தேர்தலின்போது பிரதமரே நமக்கு முன்னால் கூறினார். மாவட்டசபை என்றால் என்ன என்று எனக்கே தெரியாது என்று பிரதமரே இன்னும் இதுபற்றி தீர்மானிக்காமல் இருக்கும்போது இவர்கள் இங்குவந்து ஏதோ 'பெரிதாக'ச்சொல்லி மக்களை ஏமாற்றுகின்றனர்.

திரு. மோதிலால் நேரு பேசுகையில் சமஷ்டி அமைப்பு இந்நாட்டுக்கு உதவாதென்றும் ஆனால் அந்தச் சமஷ்டியை தமிழருக்கு பெற்றுத்தரக்கூடிய ஒரே ஒரு வல்லவர் இருப்பாரென்றால் அவர் பொன்னம்பலமாகத்தானிருக்க முடியும் என்றும் கூறினார்.

முடிக்குரிய வழக்கறிஞர்

(6-ம் பக்கம் பார்க்க)

### சிரமதானத் தொண்டர் மறைவு

சத்தியம், நேர்மை, சிக்கனவாழ்வு, தொண்டு, காந்தியம், அஞ்சாமை போன்ற அரும்பெரும் குணங்கள் நிரம்பியவரும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவருமான திரு. பொ. து. நாகரத்தினம் அவர்களது பிரிவு அவரது சொந்த ஊரான வட்டுக்கோட்டைக்கு மட்டுமன்றி இலங்கைக்குமே ஓர் பேரிழப்பாகும். வட்டுக்கோட்டை மேற்கைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு. பொன்னையா நாகரத்தினம் இம்மாதம் 15-ம் திகதி தமது 72-வது வயதில் காலமான செய்தி சமூகப் பணிகளில் ஈடுபாடு கொண்டுள்ளவர்களுக்குமிகுந்த துக்கத்தைக் கொடுத்துள்ளது வட்டுக்கோட்டையில் பிறந்தாலும் மலாய் நாட்டுக்கு உத்தியோகம் பார்க்கச் சென்றதிலிருந்து அங்கு ஆஸ்பத்திரி உதவியாளராகக் கடமையாற்றிய 16 வருட காலத்தில் அங்கு வசித்து வந்த இந்திய தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் தமது தாய்மொழியைக் கற்க வழி செய்தார், அவர்களுக்காக ஓர் ஆரம்ப தமிழ்ப்பாடசாலையைத் தொடங்கி நடாத்தி அப்பாடசாலையை அரசாங்கத்தில் பதிவுசெய்தார் அப்பாடசாலைச் சிறுவர்களிடையே சாரணர் இயக்கத்தைப் பரப்பி ஒரு சிறந்த சாரணர் குழுவையும் அமைப்பதற்கு ஊக்குவித்தார்.

தமது தாயகமான வட்டுக்கோட்டைக்குத் திரும்பிய போது அவர் தமது ஓய்வு நேரத்தையெல்லாம் சேவையிலேயே செலவுசெய்தார். இலவச சிகிச்சை இங்குள்ளவர்களுக்கு அளித்துவந்ததோடு மக்களை முன்னேற்றக்கூடிய பணியிலும் ஈடுபட்டு உழைத்தார். 'சுயேச்சா வீரர் தொண்டர் படை' என்ற சிரமதான இயக்கத்தை ஆரம்பித்து கிராம விவசாயிகளுக்குப் பெரும் உதவி புரிந்து வந்தார் இந்த இயக்கத்தில் இளைஞர்களைச் சேர்த்து பொதுநலப் பணியில் அவர்களுக்கு ஊக்கமுண்டாகும் வண்ணம் செயலாற்றினார்.

சாதிபேதத்தை அறவே வெறுத்துவந்த அவரின் சுயநலமற்ற பெரும்பணி அவரின் நினைவாக என்றும் நிற்கும்.

—கே. கிருஷ்ணர்.


அதிக வனப்பும்

எழிலும்

லாவண்ணியமும்

பெற

பொன்ட்ஸ்

வனிஷிங் கிறீம்

உங்கள் சருமத்தின் எண்ணெய்ப் பிசுக்கை அகற்றி, மாசுமறுக்களையும் குளிந்த மயிர்க் கண்களையும் மறைத்து, கரும்புள்ளிகள் உண்டாகாமல் காக்க வல்லது எண்ணெய்ப் பிசுக்கற்ற இதமான பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமத்தைப் பாதுகாத்து, சோபை யூட்டி நாளுக்கு நாள் அதிக வனப்பும் எழிலும் லாவண்ணியமும் உடையோராகத் திகழவைப்பது பொண்ட்ஸ் வனிஷிங் கிறீம்.

உங்கள் சருமம் பட்டுப்போன்று மிருதுவாக இருக்க பொண்ட்ஸ் வனிஷிங் கிறீமைத் தனியே உபயோகியுங்கள் அல்லது உங்கள் முக ஒப்பனை மணிக்கணக்கில் மலர்ச்சியுடன் இருக்க இதனை ஓர் அஸ்திவாரப் பூச்சாக உபயோகியுங்கள்.




அழகெனும் அணிபுனைந்து சருமத்திற்குச் சோபையூட்ட

பொன்ட்ஸ் வனிஷிங் கிறீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### திருமண அழைப்பு

30-8-67 புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கு நிகழும் சுபமுகூர்த்தத்தில் எமது புத்திரி சௌபாக்கியவதி இராமரஞ்ஜனிக்கும் சுன்னுகம், பிரம்மஸ்ரீ ச. சோமாஸ்கந்தக் குருக்கள் தம்பதிகளின் புத்திரன் ஸ்ரீ உமாபதிசாமாவுக்கும் திருமணம் நடைபெறும். சுற்றமித்திரர் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் அழைக்கிறோம். மாலை 6 மணிக்குப் பெண் அழைத்தல் நிகழும். தி. ச. தியாகராஜஐயரும் பாரியாரும், கொழும்புத்துறை. 2326

### விற்பனைக்கு

காணி:

சுன்னுகம் பிரதான வீதியிலும் சந்தைக்குக் கால் மைலுக்குள்ளும் வியாபார ஸ்தலத்திற்கோ, குடியிருப்பதற்கோ கட்டடம் அமைக்க வசதியான 5 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. விபரம் நேரிலோ எழுத்து மூலமோ அறியலாம். மா. நடராசா, கந்தரோடை சுன்னுகம். 2530

கட்டிடக் காணிகள்

யாழ்ப்பாணப் பட்டினம் ஆனைப்பந்திக்கு அருகாமையில், உபதபாற் கந்தோர் 3 கட்டிடக் காணிகள் 30 நாட்களில் முழுத்தொகையும் கட்டவேண்டும் விபரங்களுக்கு H. P. T./P. O. Box 1077, Colombo. 2315

கட்டிடக் காணிகள்

பருத்தித்துறை பிச் ரோட் வெளிச்ச வீட்டுக்கு அருகாமையில் 12 கட்டிடக் காணிகள். 30 நாட்களில் முழுத்தொகையும் கட்டவேண்டும் விபரங்களுக்கு: H. P. T./P. O. Box 1077, Colombo. 2314

கட்டிடக் காணிகள்.

யாழ்ப்பாணப் பட்டினம் அம்மன் ரோட் வீரகாளியம்மன் கோவிலுக்கு அருகாமையில் 6 கட்டிடக் காணிகள் 12 மாதங்களுக்கிடையில் முழுத்தொகையும் கட்டப்படவேண்டும். விபரங்களுக்கு H. P. T./P. O. Box 1077, Colombo. 2313

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**




# அரியாலை மத்திய விளையாட்டு கழக போட்டி

யாழ்ப்பாணம், செவ்.

அரியாலை மத்திய விளையாட்டுக் கழகத்தின் 4-ம் வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் நேரு இல்லம் சாம்பியனுகியது.

மூன்று இல்லங்களுக்கிடையேயான போட்டியில் நேரு இல்லம் 143 புள்ளிகளையும், இராமநாதன் இல்லம் 137 1/2 புள்ளிகளும், கெனடி இல்லம் 133 1/2 புள்ளிகளும் முறையே பெற்றன. மேற்படி கழகத்தின் மைதானத்தில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டிகளுக்கு விசேட ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் பிரதமவிருந்தினராகக் கலந்து போட்டிகளில் வெற்றி பெற்ருேருக்கு பரிசில்கள் வழங்கிஞர்.

ஆண்களுக்கிடையேயான போட்டிகளில் அதிமேற்பிரிவில் செ. கணேசலிங்கமும், மேற்பிரிவில் வை. பிரபாகரனும், மத்திய பிரிவில் ம. துரைரெத்தினமும், கீழ்ப் பிரிவில் எஸ். மோகனதாசும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பெண்கள் போட்டியில் மேற்பிரிவில் த. சந்திரா தேவியும், மத்திய பிரிவில் சி. விஜயலெட்சுமியும், கீழ்ப் பிரிவில் சோ. காமினியும் சாம்பியனுகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

வருடாந்த விளையாட்டு வீரனுக்கான வெற்றிக்கிண்ணம் செ. சண்முகலிங்கத்திற்குப் பரிசாக அளிக்கப்பட்டது. அஞ்சலோட்ட வெற்றிக்கிண்ணம் கெனடி இல்லத்திற்கு அளிக்கப்பட்டது.

சிலவிளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:- 100 யார் ஓட்டம மேற்பிரிவு ஆண்கள்: வை. பிரபாகரன், தெய்வேந்திரன், பி புஷ்பரெத்தினம, மத்தியபிரிவு: என். துரைரத்தினம், எஸ். பாலசுப்பிரமணியம், கா. சோதிராசா, கீழ்ப்பிரிவு: எஸ். மோகனதாஸ், வை. சுதாகரன், எஸ். மகேந்திரராசா.

100 யார் ஓட்டம் மேற்பிரிவு பெண்கள்:- ரி. சந்திராதேவி, செ. கனகாம்பிகை, தி. கண்ணம்மா. மத்திய பிரிவு: இ. விஜயலட்சுமி, வை. பிரேமலதா, சி. கமலாதேவி. கீழ்ப்பிரிவு: சோ. காமினி. இ. கமலவேணி, எஸ். கமலாதேவி.

1500 யார் ஓட்டம்: என். கதிர்காமநாதன், எஸ். நடராசா, கே. விமலச்சந்திரன். 220 யார் ஓட்டம் அதிமேற்பிரிவு: ம. புண்ணியசிங்கம், கா. லோகேஸ்வரன். மேற்பிரிவு: க. மாணிக்கவாசகர், கு. விமலச்சந்திரன், வை. பிரபாகரன், மத்திய பிரிவு. என். துரைரத்தினம். கீழ்ப்பிரிவு: செ. மோகனதாஸ், ம. யோகரத்தினம், சி. யோகலிங்கம். நீளம்பாய்தல்: அதிமேற்பிரிவு: செ. கணேசலிங்கம், கா. லோகேஸ்வரன், ச. உருத்திரேஸ்வரன். மேற்பிரிவு: வை. பிரபாகரன், ப. புஷ்பரெத்தினம், கு. விமலச்சந்திரன், மத்திய பிரிவு: ம. துரைரெத்தினம், மு. தர்மகுலசிங்கம், பி. யோகரெத்தினம், உயரம் பாய்தல் அதிமேற்பிரிவு: எஸ். உருத்திரேஸ்வரன், எஸ். நாகராசா, எஸ். மகேந்திரராசா. மேற்பிரிவு: ப. புஷ்பரெத்தினம், சி. பாலசிங்கம், க. மாணிக்கவாச

(6-ம் பக்கம் பார்க்க)

### தேவை

ஒலிபெருக்கியில் யாழ்ப்பாணப் பகுதியில் பிரசித்தி பெற்ற ஒரு பொருளை விளம்பரம் செய்வதற்கு 18 வயதுக்கு மேல் 25 வயதுக்குட்பட்ட பேசும் திறமை வாய்ந்த பெண்கள் உடனே தேவை. இன்று 29-8-67 காலை 10 மணி முதல் 12 மணிக்கிடையில், 358, கே. கே. எஸ். ரோட். யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நேரில் சந்திக்கவும். 2532

### பெருங்காடுகோஷ்டிக்கு வெற்றி

ஊர்காவற்றுறை, திங்கள்

புங்குடுதீவு நசரேத் சனசமூக நிலையத்தினரால் நடத்தப்பட்ட 'அலெக்சாந்தர்' வெற்றிக் கேடயத்திற்கான உதைபந்தாட்டம் சமீபத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் பெருங்காடு சனசமூக நிலையக் கோஷ்டியும், 'லக்கி ஸ்டார்' கோஷ்டியும் கலந்துகொண்டன. பெருங்காடுக்கோஷ்டி 1—0 கோலால் வெற்றிபெற்றது. புங்குடுதீவு மேற்கு கிராம சேவகர் திரு. வி. நடராசா போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

### சனசமூக நிலையக் கூட்டம்

ஊர்காவற்றுறை, திங்கள்

ஊர்காவற்றுறை சென். யேம்ஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர்:- திரு. எஸ். பி. ஜாசியஸ், உபதலைவர்:- திரு. எம். யோசேப், காரியதரிசி: திரு. பி. எஸ். சந்தியாப்பிள்ளை. உபகாரியதரிசி: திரு. ரி. எஸ். பரமநாதன், தனதிகாரி: திரு. எஸ். அந்தோனிசாமி. நிர்வாகசபை உறுப்பினர்களாக 11 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

### தேவை

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் சகல வசதியுடனும் உள்ள சிற்றுண்டிச் சாலையைத் திறமையுடன் நடாத்தக் கூடியவர் தேவை. மேலதிக விபரங்கட்கு தலைவரை நேரில் காரியாலய நேரங்களில் தொடர்புகொள்ளவும். விண்ணப்பங்கள்: தலைவர், உ கூட்டுறவு நன்னேக்குச் சங்கம், இரசாயனத் தொழிற்சாலை, பரந்தன் என்று விலாசமிட்டு கடித மேலுறையின் இடது மூலையில் "கன்ரீன்" என்ற குறியுடன் 10-9-67 காலை 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

யோ. யேசுரெட்ணம்
தலைவர்.

120







மிஸ்டர்-ஷவரஞ் செய்வதில் பரம ஆனந்தம். அடுத்து முகஷவரஞ் செய்யும்போது இதை பரீட்சித்துப் பாருங்கள் — இதன் சிறப்பம்சம் தான் என்னே! பல தடவைகள் ஷவரஞ் செய்யும்போதும் சொகுசான, திருப்தியான, வியப்பான செயல்ச் சிறப்பைத் தரும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

**ஈ.பி.கிறீஸி அண்ட் கம்பெனி லிமிட்டெட்**

தயாரிப்பாளர்கள்
இன்டர்நாஷனல் மதுபக்ஷரஸ் லிமிட்டெட்

NB 27-67-MASTERS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் மகாநாடு

# தோட்டத் தொழிலாளரை பம்பரமாக

## அரசாங்கம் ஆட்டுகிறது

### கொடுமையை எதிர்த்துப்போராட ஒன்றுபடுங்கள் என்கிருர் ஜனுப் அஸீஸ்

பழனிசாமிபுரம் (எட்டியாந்தோட்டை) திங். "தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்ததிலிருந்து தோட்டத்தொழிலாளர்கள் துன்புற்றுக் கொண்டேயிருக்கிருர்கள் தோட்டத் தொழிலாளரைப் பம்பரமாக ஆட்டி வைக்கிருர்கள். இந்தக் கொடுமைகளை எதிர்த்துப் போராட ஒன்று படுங்கள்" என்று இங்கு அழைப்பு விடுத்தார், ஜனநாயகத் தொழிலாளர்காங்கிரஸ் தலைவர் ஜனுப் ஏ. அஸீஸ்.

பழனிசாமிபுரத்தில் நேற்று இங்கு ஆரம்பமான ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் மகாநாட்டில் ஜனுப் அஸீஸ் தமது தலைமையுரையின் போதே மேற்கண்ட அழைப்பை விடுத்தார். மகாநாடு கோலாகலமாக ஆரம்பமானது. ஜனுப் அஸீஸ் தமது தலைமையுரையில் மேலும் கூறியதாவது:-

கடந்தவருடப் போராட்டத்திலே நமது தொழிலாளரின் தியாகமும், துன்பமும் பலன் தராமல் போகவில்லை. தோட்டத் தொழிலாளரிடையேயுள்ள துரோகிகளை இப்போராட்டமானது அம்பலமாக்கியதுடன் வருங்காலத்திலே தோட்டத் தொழிலாளரின் உரிமைகளுக்குப் போராடும் நமது முயற்சிகளைப் புதுப்பிப்பதில் நம்பிக்கையும் மேலும் அதிக சக்தியையும் அளித்துள்ளது.

கடந்தவருடத்தில்இந்நாடு 24 கோடி வெளிநாட்டுச் செலாவணியை இழந்துள்ளது. இதனுல் பெரும் பகுதிக்கும் 1966-ம் ஆண்டு ஜூன் மாதங்களில் நிகழ்ந்த தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தமே காரணமாகும்.

நாட்டுக்கு இத்தகைய பெரு நஷ்டங்களைக்கொணரும் நெருக்கடி நிலைமைகளுக்கு இடமளிப்பதிலும் பார்க்க அதிக உற்பத்திச் சக்திக்குரியவர்களாக விளங்கும் இத்தொழிலாளர்களுக்கு வாழ்க்கைப்படியை அளிப்பது மிகவும் இலாபகரமானதென்று நாம் அரசாங்கத்துக்குக் கூறிவைக்க விரும்புகிறோம்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும், இலங்கை தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்குமிடையே ஏற்பட்டதாகக் கூறப்படும் கூட்டு ஒப்பந்தம் எனும் பெரும் புளுகைப் பற்றிச் சொல்லாமலிருக்க முடியாது அற்பமான இந்தப் பத்துச்சத உயர்வால் எந்தவகையிலாவது தொழிலாளரது வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கும் வகையில் அமைந்துள்ளதா என்று சவால் விடுக்கின்றேன். இந்தக் கூட்டு ஒப்பந்தத்தினுல் தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள். இந்நாட்டிலுள்ள சகலதொழிற் சங்கங்களும் இன்னும் நெருக்கமாக ஒன்றுபடவேண்டும்

உதவித் தொழிலமைச்சர் திரு. எஸ். டி. எஸ். ஜயசிங்கா பேசுகையில், தோட்டத் தொழிலாளர்கள் நம் நாட்டுக்குச்செய்த சேவையை அரசாங்கமும், மக்களும் என்றுமே மறக்கமாட்டார்களென்று கூறினுர்.

# 'பொது வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ளாதீர்'

## தமிழ்பேசும் தொழிலாளருக்கு ஜி. ஜி. வேண்டுகோள்

வல்வெட்டித்துறை, ஞ'யிறு

தேசியஅரசாங்கத்துக்கு எதிராக இடதுசாரிக்கட்சிகளின் தூண்டுதலின் மீது திட்டமிடப்பட்டுள்ள பொதுவேலைநிறுத்தத்தில் தமிழ்பேசும்தொழிலாளர் கலந்து கொள்ளக்கூடாது என்று அகில இலங்கைத்தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண எம். பி.யுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அகில இலங்கை ஐக்கிய தொழிற்சங்க சம்மேளனத்தின் இரண்டாவது மகாநாட்டில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

'சிறுசேவையாளர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்படவேண்டும், இவ்விதம் வழங்கப்படாவிடில் அவர்கள் இரகசியமாக அரசியலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பார்கள். இதனை நான் அரசாங்கத்துக்கு எடுத்துக்கூற விரும்புகின்றேன்'. என்று திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தெரிவித்தார்.

பருத்தித்துறை சென்ட்ரல் படமாளிகையில் நடைபெற்ற இம்மகாநாட்டில் திரு. பொன்னம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

மார்க்ஸியவாதிகளினுல் தொழிலாளர்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாவதாலேயே நான் எனது கட்சி சார்பாக தொழிற் சங்கங்களை உருவாக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. எனது கட்சி தமிழரும் சிங்களவரும் சமமாக வாழவேண்டும் என்ற நோக்கம் கொண்டது. திறமைசாலிகளுக்கே எனது கட்சியில் இடமளிக்கப்பட்டது. போதியளவு திறமைசாலிகள் இன்று பார்லிமெண்டில் இருந்திருந்தால தமிழர்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொண்டிருக்க முடியும்.

தொழிலாளர்களின் 21 கோரிக்கைகளில் சிலவற்றைத் தானும் டாக்டர் என். எம். பெரேரா நிதி மந்திரியாக இருந்தபோது நிறைவேற்றி வைக்க முடியாது போய்விட்டது. தேசியஅரசாங்கம் தொழிலாளர்களின் கோரிக்கைகளை அளித்துவருகிறது.

தோசை, வடை என்று சொல்லி வகுப்புவாத துவேஷத்தைத் தூண்டிவரும் மார்க்ஸியவாதிகளின் தொழிற்சங்கங்களிலிருந்து தொழிலாளர் விலகி தமக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய தொழிற்சங்கங்களில் சேர்ந்து கொள்ள வேண்டும். வடக்கு, கிழக்குப் பகுதித் தொழிலாளர்கள் இதுசம்பந்தமாக மிகவும் அவதானமாக நடந்துகொள்ளவேண்டும்.

ஆசிரியர்கள் இடமாற்ற விஷயங்களில் தேவையற்ற தலையீடு இருப்பதால் நமது பாடசாலைகளில் கல்வியின் தரம் குன்றிவருகிறது".

தமிழ்க்காங்கிரஸ் ஆதிக்கத்தில் இயங்கும் இலங்கை போக்குவரத்துச்சங்க உப தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரி, பாரிஸ்டர் எம். சிவானந்தம் ஆகியோரும் பேசினர்.

இம்மகாநாட்டில் கட்சி சார்பில் இயங்கும் 27 சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.


மனோஹரா
[யாழ்ப்பாணம்]
பி.ப. 4-45, 7-00, 9-45.
Horst Bucholz
Sylva Koscina
in
THAT MAN IN ISTANBUL
(Secret Agent Film)

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 930
பேரயாதினங்களில் 4காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்
கே. ஆர். விஜயா
நடித்த
மனம் ஒரு குரங்கு

REGAL JAFFNA
Time: 4-30 7-00 p. m.
9-45 p. m.
Joe Morrison &
Barbara Biggart
in
RACING FEVER

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
கே. ஆர். விஜயா
சிவாஜி
நடித்த
செல்வம்


[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கர். ந. பாஸ்கரன். மத்திய பிரிவு: ஸ்ரீகாந்தன், வை. பஞ்சலிங்கம், மா. பாலேந்திரா, கீழ்ப்பிரிவு: செ. மோகனதாஸ், மகேந்திரராசா, ம. யோகரெத்தினம். குண்டெறிதல் அதி மேற்பிரிவு: மு தெய்வேந்திரா, எஸ். மகேந்திரராசா, செ. நாகராசா. மேற்பிரிவு: ஏ. இராமகிஷ்ணலால், சி, பாலசிங்கம். இ. சடகோபன். மத்திய பிரிவு: அ. பிரேமச்சந்திரலால், மு. தர்மசிங்கம், கோ. பாலசுப்பிரமணியம்.

### வவனியா எம். பி. . . .

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

யோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

உபதலைவர்களாக திருவாளர்கள் எஸ். ஸ்ரீபாஸ்கரன், எம். சிவானந்தன், கலா. பரமேஸ்வரன், வி. பி. சுந்தரலிங்கம், மகேந்திரராசா, எம். சிற்றம்பலம். பி. நாகரத்தினம், எஸ். சிவஞானம், எஸ். இரகுநாதன், கே. சோமஸ்கந்தன், வி. சிதம்பரப்பிள்ளை, திருஞானசம்பந்தர், தர்மலிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். [வல். நிருபர்]


2-வது வெற்றி மாதம்!
லிங்ஸ்லி
[கொட்டாஞ்சேனை]
பிளாஸா
[வெள்ளவத்தை]
விஜிதா
[ஹட்டன்]
வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
விஜயா
[மட்டக்களப்பு]
மொடேர்ன்
[பதுளை]
தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரச கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!
புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனோரமா - ராமதாஸ்
டி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த





ஏவி.எம். புரொடக்ஷன்ஸ்
அன்பே வா
(ஈஸ்ட்மென் கலர்)
கதை, டைரெக்ஷன்: ஏ. வி. திரிலோகசந்தர்
இசை மெல்லிசை மன்னர் எம். எஸ். விஸ்வநாதன்


# பெண்ணின் டயரிக்குள் இரத்தினக் கற்கள்

## சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்

காங்கேசன்துறை, திங். பலாலி விமானநிலையத்திலிருந்து திருச்சிக்குச் செல்லவிருந்த பெண்ஒருவர் தமது டயரியினுள் ஆயிரம் ரூபா பெறுமதியான இரத்தினக் கல்லை மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. பிரஸ்தாப பெண்ணைச் சந்தேகித்து காங்கேசன்துறை சுங்க கலெக்டர் திரு. கே. பரம்சோதி, உதவி சுங்க கலெக்டர் திரு. நடராஜா ஆகியோர் அவரைச்சோதனையிட்டபோது டயரியினுள் இரத்தினக் கல்லைக் கண்டுபிடித்தனர். சுங்க அதிகாரிகள் இரத்தினக்கல்லை பறிமுதல்செய்து 3000 ரூபா அபராதம் செலுத்துமாறு பெண்ணுக்கு உத்தரவிட்டனர்.

### ரூ. 4,000 அபராதம

வாலிபர் ஒருவருக்கும் 4,000 ரூபாஅபராதம் விதிக்கப்பட்டது. இவர் 16 ருத்தல் 'மேர்க்குரி'யை 2 தேங்காய் எண்ணெய்ப் போத்தலில் வைத்திருந்தாராம். இதனைக் கண்டுபிடித்த காங்கேசன்துறை சுங்க கலெக்டரும் உதவிகலெக்டரும் அவ்வாலிபருக்கு அபராதம் விதித்தனர்.

### மாவட்டசபையை..

[4ம்- பக்கத் தொடர்ச்சி]

திரு. இரத்தினசிங்கம் பேசுகையில், வல்லைவக் கொலை சம்பந்தமாக அட்டோர்ணி ஜெனரலை திரு. பொன்னம்பலம், மோதிலால் நேரு ஆகியோருடன் நானும் சென்று சந்தித்துப்பேட்டி கண்டதாகவும், ஒரு வார ஏட்டில் வந்த செய்திபொய் என்றும் கூறினுர். திருவாளர்கள் ஆனந்தசங்கரி, சு. பாஸ்கரன், செல்வி லங்கா மனேரஞ்சிதம், ஸ்ரீதரன், யோகசுந்தரம் உட்பட மற்றும் பலரும் பேசினர். (வல். நிருபர்)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இல் திதிலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org